# கல்விப் பீடம்

## கல்விமாணிப் பட்டப் பரீட்சை (பகுதி III)

## முதலாம் பருவம் - 2017/2018

## CTP 407 கலைத்திட்டக் கொள்கையும் செயன்முறையும்

நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

பகுதி I இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி I

i. கலைத்திட்டம் என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.
(2 புள்ளிகள்)

ii. இலங்கையில் பாடசாலைக் கலைத்திட்டத்திற்கான பாட நூல்களைத் தயாரிக்கும் நிறுவனத்தைக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

iii. கலைத்திட்டத்தின் அடிப்படைக் கூறுகள் 3 ஐக் குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

iv. கலைத்திட்ட அபிவிருத்தியின் போது பயன்படுத்தப்படும் நோக்க வகைக் கலைத்திட்ட மாதிரியின் பண்புகள் 3 ஐக் குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

v. இலங்கையினுடைய தற்போதைய கலைத்திட்டத்தின் தேசிய இலக்குகள் 2 ஐக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

vi. இலங்கையின் தேசிய கலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தேர்ச்சிகள் 2 ஐக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

vii. பாட உள்ளடக்கங்களைத் தெரிவு செய்யும் செயன்முறையில் பாடத்தை விருத்தி செய்பவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் 3ஐத் தருக.
(3 புள்ளிகள்)

viii. பொதுக் கல்வியின் 3 இலக்குகள் எவை?
(3 புள்ளிகள்)

### பகுதி II

1.

i. எதிர்பார்க்கப்படும் கலைத்திட்டம் என்பதனை வரையறை செய்க.
(2 புள்ளிகள்)

ii. பாடசாலை முறைமையில் எதிர்பார்க்கப்பட்ட கலைத்திட்டத்தை எதிர்பார்த்த அளவில் நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பதற்கான காரணங்களை விளக்குக.
(8 புள்ளிகள்)

iii. பொருத்தமான கற்றல் அனுபவங்கள் மற்றும் உதாரணங்களைப் பயன்படுத்தி நிலைக்குத்தான மற்றும் கிடையான கலைத்திட்ட எண்ணக்கருக்களை விளக்குக.
(10 புள்ளிகள்)

i. இலங்கையில் பாடசாலைக் கலைத்திட்ட அபிவிருத்திச் செயன்முறையின் போது பின்பற்றப்படும் பிரதான படிமுறைகளைப் பட்டியலிடுக.

(5 புள்ளிகள்)

ii. பாடசாலையில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எதிர்நோக்கப்படும் சவால்களை விளக்குக.

(5புள்ளிகள்)

iii. தற்போதுள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயன்முறையில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் 5ஐப் பெயரிடுக. இச் சவால்களைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

3.

i. நோக்கவகை அல்லாத கலைத்திட்ட மாதிரியுடன் ஒப்பிடும் போது நோக்கவகைக் கலைத்திட்ட மாதிரியின் அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(8 புள்ளிகள்)

ii. கலைத்திட்ட ஒழுங்கமைப்புச் செயன்முறையில் பயன்படுத்தப்படுகின்ற நோக்கவகை மாதிரிகள் 3 ஐக் குறிப்பிட்டு அதில் ஒரு மாதிரியை விரிவாக விளக்குக.

(12 புள்ளிகள்)

4.கீழ்வருவனவற்றுள் ஏதாவது இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. லோட்டனின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரி

ii. மாணவர்மையக் கலைத்திட்டக் கோட்பாடு

iii. கலைத்திட்ட ஒழுங்கமைப்புக் கோலங்கள்

iv.இலக்குகள், நோக்கங்கள், குறிக்கோள்கள் என்பவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகள்

(10 x 2 = 20 புள்ளிகள்)

5.

i. பாடசாலைக் கலைத்திட்டத்திற்கான பாட உள்ளடக்கத் தெரிவில் பயன்படுத்தப்படுகின்ற பரப்பெல்லைகள் ஐந்தினை (05) விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பாடசாலைக் கலைத்திட்டத்தை மறுசீரமைக்க வேண்டிய தேவை பாட உள்ளடக்கங்களை தெரிவு செய்பவர்களுக்கு ஏன் ஏற்படுகின்றது என்பதற்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

6.

i. பாட உள்ளடக்க நிபுணர்களால் பயன்படுத்தப்படுகின்ற முழுமையான பாட உள்ளடக்கத் தெரிவுச் செயன்முறையை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. கலைத்திட்ட அபிவிருத்திச் செயன்முறையில் பாட உள்ளடக்கத்தை தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்படக்கூடிய அணுகுமுறைகள் 4 ஐக் குறிப்பிட்டு அதில் 2 ஐ விளக்குக.

(10 புள்ளிகள்)

***************